


இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# கணேசலிங்கம் குகாநந்தபவன்

அவர்களின் சிவப்பதப்பேறு குறித்த

# நினைவுமலர்

05 - 05 - 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# கணேசலிங்கம் குகானந்தபவன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**05 - 05 - 2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

வையத்துள் வாழ்ந்தவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
எனும் வள்ளுவர் வாக்குக்கமைய வாழ்ந்து
இன்று வானுறை தெய்வமாகி விட்ட
எம் அன்புத் தெய்வம் ஆகிய எம் தந்தை
**கணேசலிங்கம் குகாணந்தபவன்**
அவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி
எல்லாம் வல்ல இணுவைக் கந்தன் பதம் பணிந்து
அவனருள் வேண்டி
இம்மலரினை காணிக்கையாக்குகின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தோற்றம்
1967.02.01

மறைவு
2016.04.05

அமரர்

# கணேசலிங்கம் குகாநந்தபவன்

## திதிவெண்பா

சீர்பூர்த்த மன்மத வருடம் பங்குனிமாத இருபத்து மூன்றாம் நாள்
பார்சிறக்கும் தேய்பிறை திரயோதசியாம் – வேண்டுபுகழ்
இணுவிலூர் போற்ற வாழ்ந்த கணேசலிங்கம் குகானந்தபவன்
உடல்விட்டு சேர்ந்தார் இணுவைக்கந்தன் திருவடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

### திருச்சிற்றம்பலம்

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

### தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன கழல் தொழுதெழுவேன்
கடல் தனிலமு தொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எனை ஆளுமாறு
ஈவதொன்றெனக் கில்லையேல்
அதுவோ நின திண்ணருள்
ஆவடுதுறை அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச்
சுருக்கும்புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

இடர் கெடுத்தென்னை ஆண்டு கொண்டென்னுள்
இருட்பிளம்பற வெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதி
அடல்விடைப்பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாள னுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி,
பேதியா வேகமாகிப், பெண்ணுமாய் ஆணுமாகிப்,
போதியா நிற்கும்தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கணேசலிங்கம் குகாணந்தபவன்

அவர்களின்

# வாழ்வியற் பதிவுகள்

யாழ். குடா நாட்டில் நாற்றிசையும் கோயில்களால் சூழப்பட்ட ஒரு புண்ணிய பூமியாக விளங்குவது இணுவைத் திருவூராகும். அத்திருவூரில் இன்னல்கள் நீக்கும் இணுவைக் கந்தனின் திருவருளால் 1967 - 02 - 01ம் திகதி கணேசலிங்கத் திற்கும் தெய்வநாயகிக்கும் குகாணந்தபவன் அவர்கள் மகனாகப் பிறந்தார். அவர் சிறு வயதிலேயே பண்பும், அடக்கமும், அழகும் ஒருங்கே அமையப் பெற்றவராக இருந்தமையால் குடும்பத்தில் செல்லமாக வளர்ந்து வந்தார். இவர் கடைசிப் பிள்ளையாக இருந்ததால் குகா என செல்லமாக அழைக்கப்பட்டார்.

அமரர் குகானந்தபவன் அவர்கள் சரவணபவனையும் சுதாமதியையும் சகோதர சகோதரியாகக் கொண்டு வாழ்விலே அவர்களுடன் அன்பும், பாசமும், பரிவும், காட்டி வாழ்ந்து வந்தார். அவர் இணுவில் இந்துக் கல்லூரியை ஆரம்ப பாடசாலையாகக் கொண்டு படித்த அவர், தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை கொக்குவில் இந்துக்கல்லூயில் தொடர்ந்தார். 1985 ஆம் ஆண்டு தொழில்நுட்பவியல் கல்லூயில் நீர்க்குழாய் பொருத்துவியல் படித்து 1986 ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். பின்பு இந்தியா சென்று தன் வாழ்க்கையைத் தொடர்ந்த போது 04.04.1992 ஆம் ஆண்டு இவரது தாயார் மரணமடைந்தார். பின் 1996 ஆம் ஆண்டு டோவாவிற்கு சென்றார். அதன் பின் 10.01.1999 இவரது தங்கையார் சுதாமதி அவர்களும் காலஞ் சென்றார். 2000ம் ஆண்டு தனது தந்தையுடன் வாழ்க்கையை கழிக்க இலங்கைக்கு வந்தார்.

25.8.2000 ஆம் ஆண்டு திருநாவுக்கரசு, பூமணி ஆகியயோரின் இரண்டாவது மகளான ரோகிணியை திருமணம் செய்து தனது குடும்ப வாழ்க்கையை ஆரம்பித்தார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிலிருந்து கட்டிட ஒப்பந்தகாரராக Rohini Construction என்னும் பெயருடன் பணியாற்றத்தொடங்கினார். அப்போது அவர் கட்டிட ஒப்பந்தகாரர் மட்டுமன்றி J/188 இன் கிராம அபிவிருத்திச் செயலாளராகவும் கடமையாற்றினார்.

இவருக்கு 2003ம் ஆண்டு 2ம் மாதம் 21ம் திகதி இணுவைக்கந்தனின் திருவருளால் ஆண் மகன் பிறக்கப்பெற்றார். அவரின் ஆரம்பக் கல்வி தொட்டு புலமைப்பரிசில் மட்டும் பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் படிப்பித்து புலமைப்பரிசிலில் சித்தி பெறவைத்து, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சேர்த்து மகிழ்ந்தார்.

இவ்வாறு மகிழ்ச்சியில் இருந்த போது வருட காலத்தினுள் செங்கமாரி நோயால் பாதிக்கப்பட்டு 2016ம் ஆண்டு 04ம் மாதம் 5ம் திகதி திரியோதிசி திதியில் சிவபதம் அடைந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மிகம்

- ♣ தூய்மையாக இருப்பதும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதும் தான் எல்லா வழிபாடுகளின் சாரமாகும். ஏழைகளிடமும் பலவீனர்களிடமும் நோயாளிகளிடமும் சிவபெருமானைக் காண்பவனே,உண்மையில் சிவபெருமானை வழிபடுகிறான். சிவபெருமானை விக்கிரகத்தில் மட்டும் காண்பவனுடைய வழிபாடு ஆரம்ப நிலையின் தான் இருக்கிறது.
- ♣ ஒரு மனிதன் உடலாலும் உள்ளத்தாலும் தூய்மையாக இருந்தால் அன்றி கோயிலுக்கு வருவதும் சிவபெருமானை வழிபடுவதும் பயனற்றனவாகும்.

  உடலும் உள்ளமும் தூய்மையாக இருப்பவர்களின் பிரார்த்தனைகள் சிவபெருமானால் நிறைவேற்றப்படுகின்றன.

  யார் தூய்மையற்றவர்களாக இருந்து கொண்டு சமயத்தைப்பற்றி மற்றவர்களுக்குப் போதிக்கிறார்களோ அவர்கள் இறுதியில் தோல்வியடைகிறார்கள்.
- ♣ அமைதியும் தூய்மையும் கொண்ட ஆன்மிகத்தில் இரவும் பகலும் அமிழ்ந்து வாழ முயலுங்கள் எது பயனற்ற மாயாஜாலமோ அதன் நிழல்கூட உங்கள் மீது பட வேண்டாம். உங்கள் காலின் கட்டை விரல் கூட அதன் மீது படிய வேண்டாம்.
- ♣ முதலில் பெரிய மகான்களின் வழிபாட்டைக் கொண்டுவர வேண்டும். அழியாத உண்மைகளைக் ககண்டறிந்து அந்த மகான்களின் வாழ்க்கையை மக்கள் பின்பற்றுவதற்கான லட்சியங்களாக வழங்கவேண்டும். இந்தியாவிலுள்ள ராமர், கிருஷ்ணர்,ஹனுமான், ஸ்ரீராம கிருஷ்ணர் முதலியோர், அத்தகையவர்கள்.

இங்கு ஸ்ரீராமருடையவும் ஆஞ்சநேயருடையவும் வழிபாட்டை உன்னால் கொண்டு வர முடியுமா? தற்போதைய சூழ்நிலைக்கு பிருந்தாவனக் கண்ணன் தேவையில்லை, ஒதுக்கிவிடு சிங்கக் குரலில் கீதையைக் கூறிய கருஷ்ணனின் வழிபாட்டை நாடு முழுவதும் பரப்புங்கள் அன்றாட வாழ்வில் ஆற்றல் அனைத்திற்கும் இருப்பிடமான சக்தி வழிபாட்டைக் கொண்டு வாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீ நேர்மையுடன் இரு, தைரியமாக அரு, எந்த நெறியானாலும் அதைப் பக்தி சிரத்தையுடன் பின்பற்று, அப்போது நீ இறைவனை அடைவது உறுதி.
- எப்போதுமே இதயத்தைப் பரிபக்குவப்படுத்திக் கொள்ளுங்கள் ஏனெனில் இதயத்தின் மூலம் பேசுவது இறைவன், அறிவின் மூலம் பேசுவது நீங்கள்
- ஞானத்துடன் இணைந்த பக்தியால் இறைவனை வழிபடுங்கள்.பக்தியுடன் எப்போதும் விவேகத்தை இணைத்துக் கொள்ளுங்கள்.
- நேரம் கிடைக்கும் போதெல்லாம் தியானம் செய்.
- பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும், உயர்த்தும் கருத்தே மதம் எனப்படும்.
- ராமாயணம், மகாபாரதம், உபநிடதங்கள், ஆகியவற்றிலுள்ள சிறிய கதைகளை எளிய நடையில் நூல்களாக வெளியிட வேண்டும். அவற்றை நம் சிறுவர்கள் படிக்கும் படிச்செய்ய வேண்டும்.
- முதலில் நாம் தெய்வங்களாவோம். அதன் பின்பு பிறரும், தெய்வற்களாகத் துணை புரிவோம். ஆகுக, ஆக்குக, என்ற இதுவே நமது தாரக மந்திரமாக இருக்கட்டும்.
- தீயவருக்கு உலகம் தீய நரகமாகத் தெரிகிறது. நல்லவருக்குச் சுவர்க்கமாகத் தெரிகிறது. அருளாளர்களுக்கு அருள் வடிவமாகத் தெரிகிறது. பகையுணர்ச்சி உடையவர்களுக்கு வெறுப்புமயமாகத் தெரிகிறது. சண்டைசச்சரவு செய்வோருக்குப் போர்க்களமாகத் தெரிகிறது. அமைதியாளருக்கு அமைதிக் களஞ்சியமாகத் தெரிகிறது. முழுமையுற்ற மனிதனுக்கு எல்லாமே தெய்வமாகத் தெரிகிறது. அவன் அனைத்தையும் தெய்வமாகவே காண்கிறான்.
- நமது சமயத்தின் மகத்தான உண்மைகளை உலகமெல்லாம் எடுத்துச் சொல்லுங்கள் எலகம் அவற்றுக்காக் காத்துக் கொண்டிருக்கிறது.
- நன்மைகள் அனைத்திற்கும் இறைவன் காரணம் என்றும், தீமைகளுக்கு நீயே காரணம் என்றும் கொள்வதே நல்லது. இதனால் பக்தியும் சிரத்தையும் உண்டாகும். அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்கிட்டும். உன்னை யாரும் படைக்கவில்லை. நீயே உன்னைப் படைத்துக் கொண்டாய், இதுவே விவேகம்,இதுவே வேதாந்தம்.

- நன்மை எல்லாம் இறைவனால் செய்யப்படுகின்றன. என்றும், தீமையைச் செய்பவன் தானே என்றும் கொள்ள வேண்டும். மனதைத் தூய்மைப்படுத்த இதுவே எளிய வழி.
- எனக்கு அரசியலில் நம்பிக்கை கிடையாது. கடவுளும் சத்தியமும் இந்த உலகில் உண்மை அரசியல் ஆகும். மற்றவையெல்லாம் வெறும் குப்பை.
- உடலில் இரத்தம் தூயதாகவும், வன்மை பெற்றும் இருந்தால் நோய்க்கிருமி எதுவும் உயிர்வாழ முடியாது. நமது சமுதாயத்தின் இரத்தம் ஆன்மின வாழ்க்கையாகும். அது தூய்மையோடிருந்து வலிமையோடு சீராக ஓடினால் மற்ற எல்லாம் சரியாக இருக்கும். அந்த இரத்தம் மட்டும் சுத்தமாக இருந்தால், அரசியல்,சமுதாயம், பொருளாதாரம், முதலியவற்றிலுள்ள குறைபாடுகள் எல்லாம் நாட்டின் வறுமை கூட நீங்கிவிடும்.
- அரசியல், சமூக முன்னேற்றங்கள் எல்லாம் அவசியமல்ல என்று நான் சொல்லவில்லை. ஆனால் அவையெல்லாம் இந்த நாட்டிற்கு இரண்டாம் பட்ச முக்கியத்துவமேயுடைன. என்றும், சமயமே இங்கே தலை சிறந்ததாகும். என்றும் நான் கூறுகின்றேன். இதை நீங்கள் மனதில் பதியவைத்துக் கொள்ள வேண்டும்.

### பொறாமை கூடாது

- அடிமைகள் எல்லாருக்கும் பெரிய சனியனாக இருப்பது பொறாமையேயாகும். நமது நாட்டைப் பிடித்த சனியனும் அது தான். எப்போதும் பொறாமையை விலக்குங்கள் இது வரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள்.
- காலங்காலமாக நாம் பயங்கரமான பொறாமையால் நீர்த்துப் போயிருக்கிறோம். எப்போதும் மற்றவர்கள் மீது பொறாமைப்பட்ட படியே இருக்கிறோம். இந்த மனிதனுக்கு என்ன அதிக முக்கியத்துவம் எனக்கு ஏன் இல்லை? என்றே எப்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிறோம்.

- ♣ பொறாமையையும் ஆணவத்தையும் விட்டு விடு பிறருக்காகக் கூடி உழைக்கக் கற்றுக்கொள். நமது நாட்டிற்கு மிகவும் தேவையானது இதுவே.
- ♣ இந்தியாவில் மூன்று பேர் ஓர் ஐந்து நிமிடத்திற்கு ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடன் செயற்பட முடிவதில்லை. ஒவ்வொருவரும் பட்டம் பதவிகளுக்காகப் போட்டியிடுகிறார்கள். இதனால் நாளடைவில் அந்த இயக்கமே அழிந்து போகும் நிலைக்கு ஆளாகிவிடுகிறது. கடவுளே! பொறாமைப்படாமலிருக்க நாங்கள் எப்போது தான் கற்றுக் கொள்ளப் போகிறோமோ!
- ♣ ஓர் அடிமையின் நெற்றியில் இயற்கை எப்போதும் இடும் குறியாகிய பொறாமை என்ற மாசைத் துடைத்து விடுவோமாக, ஒருவரிடமும் பொறாமை கொள்ளாதே.
- ♣ பகை, பொறாமை, ஆகியவற்றை நீ வெளி விட்டால் அவைவ ட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்து விடும். வேறு எந்தச் சக்தியாலும் அவற்றைத் தடுத்து நிறுத்த முடியாது. ஒரு முறை நீ அவற்றை இயங்கும்படி செய்துவிட்டால் அதனால் வரும் விளைவையும் நீ ஏற்றே ஆக வேண்டும். இதை நீ நினைவில் வைத்துக் கொண்டால் தீய செயல்களைத் செய்வதிலிருந்து அது உன்னைத் தடுத்து நிறுத்தும்.
- ♣ முதலில் நாம் வழிபட வேண்டிய தெய்வற்கள் நமது தேசமக்களேயாவர். ஒருவெரிடம் ஒருவர் சண்டையிடுவதற்குப் பதிலாக ஒருவரையொருவர் பூஜிப்போமாக.

## இந்தியாவின் வீழ்ச்சி

- ♣ நம் நாட்டு மக்கள் தன்னம்பிக்கை இழந்து வாழத் தொடங்கிய பிறகு தான் வீழ்ச்சியும் குறையும் ஏற்பட ஆரம்பித்தன.
- ♣ நான் உலகம் முழுவதும் சுற்றியிருக்கிறேன். மற்ற நாட்டு மக்களுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது இந்திய நாட்டு மக்கள் செயலற்ற தன்மையில் பெரிதும் அழுந்திக் கிடக்கிறார்கள். வெளியிலே சாத்விகத் தோற்றம், ஆனால் உள்ளே பார்த்தாலே கல்லைப் போன்ற கட்டை போன்ற செயலற்ற தன்மையே இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♣ இந்தியா வீழ்ச்சியடைந்ததற்கு அதன் குறுகிய புத்தியும் செயல்முறையுமே காரணமாகும். பண்டைய பெருமையை இந்தியா இழந்திருப்பதற்கு இவையே காரணம். இந்தக் குறுகிய புத்தியை வேரோடு களையாதவரையில் ஒரு போதும் இந்தியா மேன்மை அடையாது.

♣ நாமும் உன்றும் செய்வதில்லை. ஏதாவது செய்பவரையும் எள்ளி நகையாடி ஏளனம் செய்வோம். நம் நாட்டவர்கள் வீழ்ச்சியுற்றதற்கு, நாசகரமான இந்தக் குறைபாடே காரணம்.

♣ செருக்கினாலும் அரசியல் அதிகாரத்தின் விளைவாகவும் நம் நாட்டுக் கல்வியும் அறிவும் ஒரு சிலரிடமே குவிந்து போயின. நமது நாட்டின் அழிவுக்கு இதுவும் ஒரு காரணம்.

♣ பாமர மக்களைப் புறக்கணித்து ஒதுக்கியதுதான் நமது நாடு செய்த பெரும் பாவம் என்று நான் கருதுகிறேன். நமது வீழ்ச்சிக்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.

♣ இந்துக்கள் தங்களுடைய கடந்தகால வரலாற்றை ஆழ்ந்து படிக்கும் அளவிற்கு ஏற்ப, அவர்களின் எதிர்காலம்,மேலும் மேலும் பெருமைக்கு உரியதாக அமையும். யார் ஒருவர் இந்தியாவின் கடந்த காலப் பெருமைகளை வீடுதோறும் கொண்டு சென்று போதிக்கிறாரோ, அவரே நம் தாய்நாட்டிற்கு மிகப் பெரிய அளவில் நன்மை செய்தவராவார். இந்தியாவின் வீழ்ச்சி, பண்டைக்காலத்தில் நிலவிய சட்டங்களும் பழக்க வழக்கங்களுமம் தவறானவையாக இருந்த காரணத்தால் ஏற்பட்டுவிடவில்லை. மாறாக அவற்றுக்கு உரிய நியாயமான முடிவுகிட்டும் வரையிலும் அவற்றைக் கடைப்பிடிப்பதற்கு அனுமதி அளிக்கப்படாத காரணத்தால் தான் இந்த வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

♣ நமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை முறையாகப் பின்பற்றாமற் போனது தான் சமுதாயத்தின் இப்போதைய வீழ்ச்சிக்குக் காரணம் என்று நான் சொல்கிறேன். இந்த உண்மையை நான் நமது பழைய நூல்களிலிருந்து ஆதாரம் காட்டி மெய்ப்பிக்கத் தயாராக இருக்கிறேன். ஆம், நான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் என்னால் நிரூபித்துக் காட்ட முடியும்.

♣ நமது தேசம் குடிசையில் இருக்கிறது என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகூருங்கள் ஆனால் அந்தோ அந்தக் குடிசைகளில் வாழும் மக்களுக்கு எவரும் எதுவும் செய்தாரில்லையே.

- இந்திய மக்கள் தாழ்வுற்று ஏழைகளாக இருப்பதை நினைக்கும் போது என் உள்ளம் எவ்வளவு வேதனைப்படுகிறது. தெரியுமா? அவர்களுக்கு நல்ல வாய்ப்பு இல்லை, தப்பவழி இல்லை! அவர்களால் உயர்வடைய இயலவில்லை.
- பிறர் உதவியை நாடி இருக்கும் ஒரு குழந்தையைப் போல் நமது தேசிய இயல்பு முழுவதும் அமைந்துள்ளது. சாப்பாட்டை வாய் அருகே கொண்டு போய் வைத்தால் அதைச் சாப்பிட அனைவரும் தயாராக இருக்கிறார்கள். சாப்பாட்டை ஊட்ட வேண்டும் என்று சிலர் ஆசைப்படுகின்றனர். சுய உதவி செய்து கொள்ளத் தெரியாதவர்கள் வாழத் தகுதியற்றவர்கள்.
- நமது இழிந்த நிலைமைக்கும் வறுமைக்கும் காரணம் நாமேயன்றி. ஆங்கிலேயர் காரணம் அல்ல என்று ஒவ்வொரு தடவையும் என் இதயம் கூறுகிறது. நமது மேல் சாதி மக்கள் அகம்பாவத்தோடு ஏழை எளிய மக்களைத் தங்கள் காலடியில் போட்டுத் துவைத்து மிதித்து மனித உணர்வு அறவே அற்றுப் போகும் படி அவர்களைக் கொடுமைப்படுத்தினார்கள. அது தான் நமது இழிந்த நிலைக்குக் காரணமே தவிர ஆங்கிலேயர் காரணம் அல்ல என்பது நிச்சயம்.

## கல்வி

- கல்வி, கல்வி, கல்வி - இது ஒன்றே இப்போது நமக்குத் தேவை. ஐரோப்பாவின் பல நகரங்களுக்கு நான் பயணம் செய்திருக்கிறேன். அங்கே சாதாரண ஏழை எளிய மக்களுக்குக் கூடக் கிடைத்திருக்கும் வாழ்க்கை வசதிகளையும் கல்வியையும், நான் கவனித்திருக்கிறேன். அப்போதெல்லாம் நமது நாட்டு ஏழை எளிய மக்களின் பரிதாப நிலையை நினைத்து நான் கண்ணீர் விட்டு அழுதிருக்கிறேன். இந்த வேறுபாட்டிற்கு என்ன காரணம்? கல்வி என்பது தான் எனக்கு கிடைத்த விடை.
- பாமரர்களாகிய பொதுமக்களை வாழ்க்கைப் போராட்டத்திற்குத் தகுதி பெற்றவர்களாக இருக்க உதவி செய்யாத கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான நல்ல ஒழுக்கத்தையும் பிறருக்கு உதவி புரியும் ஊக்கத்தையும் சிங்கங்கள் போன்ற மன உறுதியையும் வெளிப்படுத்தப் பயன்படாத கல்வி, அதைக் கல்வி தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைத் தனது சொந்தக் கால்களில் நிற்கும் படி செய்கிறதோ, அது தான் உண்மையான கல்வியாகும்.

- சமுதாயத்திலுள்ள ஆண் பெண் அனைவருக்கும் உண்மைக் கல்வியை அளிப்பதே நமது கடமை. அந்தக் கல்வி மூலமாக அவர்கள் தங்களுக்கு நல்லது எது கெட்டது எது என்பதைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். கெட்டதை நீக்கி விடுவார்கள். அதன் பிறகு சமுதாயத்தில் வலிந்து ஒன்றை நிறுவவோ எதையும் அழிக்கவோ வேண்டியதில்லை.
- தாழ்ந்த மக்களுக்கும் பண்பாட்டையும் கல்வியையும் அளித்து அவர்களை அறியாமை என்ற உறக்கத்திலிருந்து விழிக்கச் செய். அவர்கள் வழித்து எழுந்தால் -நிச்சயம் ஒரு நாள் வழித்து எழத்தான் போகிறார்கள். அப்போது நீங்கள் அவர்களுக்குச் செய்த நல்ல சேவையை மறக்காமல் எப்போதும் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள்.
- ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது அந்த நாட்டு மக்கள் பெற்றிருக்கும் கல்வி, அறிவாற்றல், ஆகியவற்றைப் பொறுத்தே அமைகிறது. நாம் மீண்டும் உயர்வடைய வேண்டுமானால் பொதுமக்கள் எல்லோருக்கும் கல்வியைப் பரப்பியாக வேண்டும். பொதுமக்களுக்குக் கல்வியைத் தந்து அவர்களை உயர்த்திவிடுங்கள். இது ஒன்றே உன்று தான் நமது சிறப்பைப் பெறுவதற்கு உரிய ஒரே ஒரு வழியாகும்.
- துக்கம் என்பது அறியாமை காரணமாகத்தான் ஏற்படுகிறது. வேறு எதனாலும் அல்ல என்பதை பட்டப்பகல் வெளிச்சம் போல் நான் தெளிவாகக் பார்க்கிறேன்.
- எனவே நாம் அமைக்கும் கல்வி, நா:, முழுவதற்கும் பொதுவாக விளங்கும் கல்வியாக, ஆன்மிகத்தைக் கொண்டதாகவும் உலக நடைமுறைக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். மேலும் தேசீயப் பண்பாட்டிற்கு ஏற்றதாகவும், வாழ்க்கையில் கடைப்பிடிக்கக்கூடிய பண்பாட்டுக் கல்வியாகவும் இருப்பது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல்பற்றிய தகவல்கள்

01. ஒரு நாளில் இதயம் எத்தனை முறை துடிக்கும்?
1,00 000 முறை

02. மார்பை பாதுகாக்கும் எலும்பின் பெயர் என்ன?
ரிப்ஸ்

03. புதிதாக பிறந்த குழந்தையின் சராசரி எடை என்ன?
2.G கி.கி

04. இதயம் எந்த தசைகளால் ஆக்கப்பட்டது?
கார்டியக் தசை

05. இதயத்தை சுற்றியுள்ள சவ்வு எது?
பெரிகார்டியம்

06. நியூரான் என்றால் என்ன?
நரம்பு செல்

07. மூளையில் உள்ள நியூரான்களின் எண்ணிக்கை யாது?
1400

08. மனித உடலில் எத்தனை மன தசைகள் காணப்படுகின்றன?
639

09. இதய துடிப்பை செய்யும் வேதிப்பொருள் எது?
அசிட்டில் சோலைன்

10. மருத்துவ அறிவியலின் தந்தை யார்?
ஹிப்போகிரேடஸ்

11. ஜெனிடிக்ஸ்-ன் தந்தை என்றழைக்கப்படுபவர் யார்?
கிரிகோர் மெண்டல்

12. இதயத்தை கவர்ந்துள்ள சவ்வில் காணப்படும் திரவத்தின் பெயர்?
பெரிகார்யெல் பாய்மம்

13. சைலண்ட் கில்லர் எனப்படும் நோய் எது?
இரத்த அழுத்த நோய்

14. இரத்தம் வடிதல் போன்றவற்றால் குறையும் விட்டமின் எது?
விட்டமின் கே

15. செரித்தல் திரவத்தின் உள்ள அமிலத்தால் வரும் நோய் எது?
பெப்டிக் அல்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. நமது உடலில் மிகவும் கெட்டியான தோல் எங்குள்ளது?
பாத்தில்
17. இம்மியூனிட்டி என்றால் என்ன?
எதிர்ப்பாற்றல்
18. ஓபன்சோர் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அல்சர்
19. பாராமென்சியா என்றால் என்ன?
மிக சிறந்த ஞாபகம்
20. ஓர் மனித உடலில் வாழும் ஒட்டுண்ணி எது?
கோலோன்
21. அப்பாகிக் கண்கள் என்றால் என்ன?
குறுக்கு பார்வை உடைய கண்கள்
22. பரோட்டீன் முக்கிய பொருள் எது?
அமினோ ஆசிட்
23. நமது உடலில் மிக பெரிய உறுப்பு எது?
கணையம்
24. மனிதனின் முதுகுத் தண்டின் எலும்புகளின் எண்ணிக்கை?
33
25. ஒரு கிராம் கொழுப்பில் எவ்வளவு கலோரிகள் கிடைக்கும்?
9
26. மாலைக் கண்நோய் எந்த வைட்டமின் குறைவால் ஏற்படுகிறது.?
விட்டமின் ஏ
27. விட்டமின் குறைவால் ஏற்படும் நோய் எது?
பெரிபெரி
28. பற்களை பாதிக்கும் நோய் எது?
கேரிஸ்
29. மையோப்பியா என்ற நோய் மனிதனின் எந்த உடலுறுப்பை தாக்குகிறது?
கண்கள்
30. நிமோனியா நோய் உடலின் எந்த உறுப்பை பாதிக்கும்?
நுரையீரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறைத் தோத்திரத்திரட்டு

## முதலாந்திருமுறை

### திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்

தலம்:- திருப்பிரமபுரம் கட்டளை :-1
பண்:- நட்டபாடை இராகம்: கம்பீரநாட்டை
தாளம்:- ரூபகம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

தலம்:- கோயில்(சிதம்பரம்) கட்டளை:-3
பண்:- குறிஞ்சி இராகம்:- அரிகாம்போதி
தாளம்:-ஆதி

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றார் வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

தலம்:- திருச்சிராப்பள்ளி கட்டளை:-5
பண்:- குறிஞ்சி இராகம்:- அரிகாம்போதி
தாளம்:- திஸ்ரதிரிபுடை

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம்:- திருமகலும் திருச்செங்காட்டங்குடியும்
கட்டளை:-3 பண்:- நட்டபாடை
இராகம்:- கம்பீரநாட்டை தாளம்:- ஆதி

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்லமல்கு
சீர்கொள்செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தி யாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

தலம்:- திருக்கோலக்கா கட்டளை:-1
பண்:- தக்கராகம் இராகம்:- காம்போதி
தாளம்:- ஆதி

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையும் கொண்ட உருவ மென்கொலோ

தலம்:- திருப்பாச்சிலாச்சிரமம் கட்டளை:-4
பண்:- தக்கராகம் இராகம்:- காம்போதி
தாளம்:- ஆதி

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றி முடித்து
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ
ஆரிடமும் பலி தேர்வர்
அணிவளர் கோலமெலாஞ் செய்து பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வதோ இவர்மாண்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம்:- திருவோத்தூர் கட்டளை:-2
பண்:- பழந்தக்கராகம் இராகம்:- ஆரபி
தாளம்:- ஆதி

பூத்தேர்ந் தாயன கொண்டு நின் பொன்னடி
ஏத்தா தாரில்லை எண்ணுங் கால்
ஓத்தூர் மேய ஒளிமழு வாளங்கைக்
கூத்தீர்உம்ம குணங்களே.

தலம்:- திருவலிவலம் கட்டளை:-3
பண்:- பழந்தக்கராகம் இராகம்:- ஆரபி
தாளம்:- ஆதி

தாயுநீயே தந்தையே சங்கரனே அடியேன்
ஆயுநின்பால் அன்புசெய்வா னாதரிக்கின் றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னுள் ஐவர்நின் றொன்றலொட்டார்
மாயமேயென்று அஞ்சுகின்றேன் வலிவலமே யவனே.

தலம்:- திருமறைக்காடு கட்டளை:-8
பண்:- நட்டபாடை இராகம்:- கம்பீரநாட்டை
தாளம்:- ரூபகம்

சிலைதனை நடுவினை நிறுவியோர்
சினமலி அரவதுகொடுதிவி
தவவலி சுரர் அசுரர்களொலி
சலசலகடல் கடைவுழிமிகு
கொலைமலி விடமெழ அவருடல்
குலைதர அதுநுகர்பவனெழில்
மலைமலி மதில் புடைதழுவிய
மறைவனம் அமர்தருபரமனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம்:- திருக்கோளிலி கட்டளை:-1
பண்:- பழந்தக்கராகம் இராகம்:- ஆரபி
தாளம்:- ரூபகம்

நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய் நம்கிளை கிளைக்கும் கேடுபடாத்திறம் அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலி எம் பெருமானே.

தலம்:- திருவையாறு கட்டளை:-1
பண்:- மேகராகக்குறிஞ்சி இராகம்:- நீலாம்பரி
தாளம்:- கண்டசாபு

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐம்மே லுந்தி
அலமந்தபோதாக அஞ்சேலென்
றருள்செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சி
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்கும் திருவையாறே.

தலம்:- பொது கட்டளை:-3
பண்:- வியாழக்குறிஞ்சி இராகம்:- சௌராஷ்டிரம்
தாளம்:- ஆதி

அவ்வினைக் கிவ்வினையாம் என்றுசொல்லும் அஃதறிவீர்
உய்வினைநாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினைசெய் தெம்பிரான் கழல்போற்றதும் நாமடியோம்
செய்வினை வந்தெம்மைத் தீண்டப்பெறா திருநீல கண்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம்:- திருப்பராய்த்துறை　　　கட்டளை:-2
பண்:- மேகராகக்குறிஞ்சி　　　இராகம்:- நீலாம்பரி
தாளம்:- ஆதி

நீறு சேர்வதோர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதோர் கோல மாய
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர்சடை அண்ணலே.

தலம்:- திருக்கழுமலம்　　　கட்டளை:-7
பண்:- நட்டபாடை　　　இராகம்:- கம்பீரநாட்டை
தாளம்:- ஆதி

பிறையணி படர்சடை முடியிடை
பெருகிய புனலுடை அவனிறை
இறையணி வளையிணை முலையவள்
இணைவன தெழிலுடை இடவகை
கறையணி பொழில்நிறை வயலணி
கழுமலம் அமர்கலன் உருவினன்
நறையணி மலர்நறு விரைபுல்கு
நலமலி கழல்தொழல் மருவுமே.

தலம்:- திருத்தூங்கானைமாடம்　　　கட்டளை:-3
பண்:- பழந்தக்கராகம்　　　இராகம்:- ஆரபி
தாளம்:- ஆதி

ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை
உடைத்தாய வாழ்க்கை ஒழியத்தவம்
அடங்கும் இடங்கருதி நின்றீரெல்லாம்
அடிகள் அடிநிழற்கீழ் ஆளாம் வண்ணம்
கிடங்கும் மதிலும் சுலாவியெங்கும்
கெழுமனைகள் தோறும் மறையின்
- தடங்கோயில்சேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கும் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே.

தலம்:- திருவெங்குரு
பண்:- குறிஞ்சி
தாளம்:- ஆதி
கட்டளை:-1
இராகம்:- அரிகாம்போதி

காலைநன் மாமலர் கொண்டடிபரவி
கைதொழு மாணியைக் கறுத்த வெங்காலன்
ஓலமதிடமுன் உயிரொடு மாள
உதைத்தவன் உமையவள் விருப்பன் எம்
- பெருமான்

மாலை வந்தணுக ஓதம் வந்துலவி
மறைதிரை சங்கொடு பவளமுனுந்தி
வேலை வந்தனையும் சோலைகள் சூழ்ந்த
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே.

தலம்:- திருக்கழுமலம்
பண்:- வியாழக்குறிஞ்சி
தாளம்:- ஆதி
கட்டளை:-7
இராகம்:- சௌராஷ்டிரம்

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்ற உம்பரப்
பாலே சேர்வா யேனோர்காண் பயில்கண முனிவர்களும்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின் மங்கை தன்னோடும்
சேர்வார் நாள்நாள் நீள்கைலை திகழ்தரு பரிசதெலாம்
சந்தித்தே இந்தப்பார் சனங்கள் நீள்கைலை திகழ்தரு
- பரிசதெலாம்
தாமே காணா வாழ்வாரத் தகவுசெய் தவனதிடம்
கந்தத்தால் எண்டிக்கும் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார் பூவார்சீர்மேவும் கமழ்ந்திலங்கு சந்தனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம்:- திருத்தருமபுரம் கட்டளை:1
பண்:- யாழ்முரி இராகம்:- அடானா
தாளம்:- ரூபகம்

மாதர் மடப்பிடியும் மட அன்னமும் அன்னதோர்
நடையுடை மலைமகள் துணையென மகிழ்வர்
பூதஇனப் படைநின்றிசை பாடவும் ஆடுவர்
அவர்படர் சடைநெடு முடியதொர் புனலர்
வேதமோ டேழிசை பாடுவார் ஆம்கடல் வெண்டிரை
இரைநுரை கரைபொருது விம்மி நின்றயலே
தாதவிழ் புன்னை தயங்குமலர்ச் சிறைவண்டறை
எழில்பொழில் குயில் தருமபுரம் பதியே.

## இரண்டாம் திருமுறை

### திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்.

தலம்:- திருவாலவாய் கட்டளை:-2
பண்:- காந்தாரம் இராகம்:- நவரோஜ்
தாளம்:- ரூபகம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திருள்ள நீறு
செந்துவர் வாய்உமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

கோளாறு பதிகம் -பொது
பண்:- பியந்தைக் காந்தாரம் இராகம்:- நவரோஜ்
கட்டளை:-1 தாளம்:- திஸ்ரதிருபுடை

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தலம்:- திருவரத்துறை கட்டளை:2
பண்:- காந்தாரம் தாளம்:- ஆதி

எந்தை யீசையெம் பெருமா னேறமர்
கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற்
சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புனல்
நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்
வாயி லரத்துறை யடிகள் அருளே.

தலம்:- திருமருகல் கட்டளை:-2
பண்:- இந்தளம் இராகம்:- மாயாமாளவகௌளை
தாளம்:- ஆதி

சடையாயெனு மால்சர ண்நீயெனுமால்
விடையாயெனு மால்வெரு வாவிழுமால்
மடையார்குவ ளைமல ரும்மருகல்
உடையாய் தகுமோஇவ ளுண்மெலிவே.

தலம்:- திருவலஞ்சுழி கட்டளை:-1
பண்:- நட்டராகம் தாளம்:- ஆதி

என்ன புண்ணியஞ் செய்தனை
நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னநீபுரி நல்வினைப்பயனிடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமணித் தரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திருவலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னியாதரித் துஏத்தியும் பாடியும்
வழிபடு மதனாலே

ஷேத்திரக்கோவை கட்டளை:-4
பண்:- இந்தளம் தாளம்:- ஆதி

ஆரூர் தில்லை யம்பலம் வல்ல நல்லம்
வடகச்சி யும்அச்சிறு பாக்கம் நல்ல
கூரூர் குடவாயில் குடந்தை வெண்ணி
கடல் சூழ் கழிப்பாலை தென்கோடி பீடார்
நீரூர் வயல் நின்றி யூர்குன்றி யூரும்
குருகாவை யூர்நாரை யூர்நீடு கானப்
பேரூர் நன்னீள் வயல்நெய்த் தானமும்
பிதற்றாய் பிறைசூடி தன் பேரிடமே.

தலம்:- திருக்கபாலீச்சரம் கட்டளை:- 1
பண்:- சீகாமரம் இராகம்: நாதநாமக்கிரியை
தாளம்:- கண்டசாபு

மட்டிட்ட புன்னையங்கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திரபல் கணர்த்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்

தலம்:- திருப்புள்ளிருக்கும்வேளூர் கட்டளை:-1
பண்:- சீகாமரம் தாளம்:- திஸ்திரிபுடை

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயுயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கும் வேளூரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம்:- திருக்கேதாரம் கட்டளை:-1
பண்:- செல்வழி இராகம்:-யதுகுலகாம்போதி
தாளம்:- திஸ்ரதிரிபுடை

தொண்டரஞ்சு களிறுமடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யுமிடம் என்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரி
கெண்டைபாயச் சுனை நீல மொட்டலரும் கேதாரமே.

## மூன்றாம் திருமுறை
### திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

தலம்:- திருக்கழுமலம்( சீர்காழி) கட்டளை:-1
பண்:- கொல்லி இராகம்:- நவரோஜ்
தாளம்:- மிஸ்ரசாபு

மண்ணில்நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல்ல கதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல்ல.ஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.

தலம்:- திருவாலவாய் கட்டளை:-3
பண்:- கொல்லி இராகம்:- நவரோஜ்
தாளம்:- மிஸ்ரசாபு

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவன் என்று நீ பரிவெய்திடேல்
ஆனைமாமலை ஆதியாய இடங்களிற் பல அல்லல் சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளை:- 1
இராகம்:- பைரவி

பண்:- கௌசிகம்
தாளம்:- ஆதி

காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமச்சி வாயவே.

தலம்:- திருவாலவாய்
பண்:- கௌசிகம்
தாளம்:- ரூபகம்

கட்டளை:1
இராகம்:- பைரவி

வீடலால வாயிலாய் விழுமியார்க ள்நின்கழல்
பாடலால வாயிலாய் பரவிநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

## நாலடி மேல்வைப்பு

தலம்:- திருவாவடுதுறை
பண்:- காந்தாரபஞ்சமம்

கட்டளை:- 1
தாளம்:- ஆதி

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.
இதுவோ எமையாளுமாறுஈ வதொன்றெமக் கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம்:- திருக்கோணேஸ்வரம் கட்டளை:1
பண்:- புறநீர்மை இராகம்:- பூபாளம்
தாளம்:- ஆதி

தாயினும் நல்ல தலைவர் என்று அடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோண மாமலை அமர்ந்தாரே.

பண்:- சாதாரி இகம்:- பந்துவராளி
தாளம்:- கண்டசாபு

எந்தமது சிந்தை பிரியாத பெருமானென
இறைஞ்சி இமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு தீபமலி
வாய்மை அதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்ய
அமர்கின்ற அழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு
மேவுபதி சண்பைநகரே.

தலம்:- திருச்செங்காட்டங்குடி கட்டளை:- 1
பண்:- பஞ்சமம் இராகம்:- ஆகிரி
தாளம்:- கண்டசாபு

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டஞ் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரடி மேல் வைப்பு

தலம்:- திருக்கொள்ளம்பூதூர் கட்டளை:-1
பண்:- காந்தாரபஞ்சமம் இராகம்:- கேதாரகௌளை
தாளம்:- ஆதி

கொட்டமே கமழும் கொள்ளம் பூதூர்
நட்ட மாடிய நம்பனை யுள்க
செல்ல வுந்துக சிந்தையார் தொழ
நல்கு மாறருள் நம்பனே.

தலம்:- திருப்புகலி கட்டளை:-2
பண்:- காந்தாரபஞ்சமம் இராகம்:- கேதாரகௌளை
தாளம்:- திஸ்ரதிரிபுடை

கண்ணுதலானும் வெண்ணீற்றினாலும் கழல் ஆர்க்கவே
பண்ணிசை பாடநின்று ஆடினாலும் பரஞ்சோதியும்
புண்ணிய நான்மறையோர்கள் ஏத்தும் புகலிநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் வீற்றிருந்த பெருமானன்றே.

தலம்:- திருநெல்வேலி கட்டளை:- 2
பண்:- சாதாரி இராகம்:- பந்துவராளி
தாளம்:- திஸ்ரதிரிபுடை

மருந்தவை மந்திரம் மறுமைநன் னெறியவை
மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடும் அவர் நாமமே சிந்தைசெய்
நன்னெஞ்சமே
பொருந்து தண்புறவினிற் கொன்றைபொன்
சொரிதரத் துன்றுபைம்பூஞ்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வேலி யுறை
செல்வர்தாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம்:- திருச்சிறுகுடி கட்டளை:- 4
பண்:- சாதாரி இராகம்- பந்துவராளி
தாளம்:- ஆதி

திடமலி மதிளணி சிறுகுடிமேவிய
படமலி அரவுடை யீரே
படமலி அரவுடையீா் உமைப்பணிப்பவா்
அடைவதும் அமருல கதுவே

தலம்:- திருஆலவாய் கட்டளை:-6
பண்:- பழம்பஞ்சுரம் இராகம்:-சங்கராபரணம்
தாளம்:- மிஸ்ரசாபு

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே
பாதி மாதுடனாய பரமனே
ஞால நின்புகழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையுமெம் ஆதியே

தலம்:- சீர்காழி திருமாலைமற்று கட்டளை:- ஆதி
பண்:- கௌசிகம் இராகம்:- பைரவி
தாளம்:- ஆதி

யாமாமாநீ யாமரமா யாழீகாமா காணாகா
காணாகாமா காழியா மாமாயாநீ மாமாயா
நேரகழதமித யாசழிதா யேனனி ளாயுழிகா
காழியுளா வினையேனினையே தாழிசயாத மிழாகரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம்:- திருநல்லூர்ப் பெருமணம் கட்டளை:- 1
பண்:- அந்தாளிக்குறிஞ்சி இராகம்:- சாமா
தாளம்:- ஆதி

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருதமணம் பாட்டு மெய்யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேய நம்பானே

நறும் பொழில் காழியுள் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும் பொரு ளாற்சொன்ன ஒண்தமிழ் வல்லார்க்கு
அறும்பழி பாவம் அவலம் இலரே.

## நாலாந் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார்

தலம்:- திருவதிகை வீரட்டானம் கட்டளை:-1
பண்:- கொல்லி இராகம்:- நவரோஜ்
தாளம்:- ஆதி

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே இரவும் பகலும்
பிரியா துவணங் குவன்எப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றின் அகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றேன் அடி யேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம்:- திருவதிகை வீரட்டானம் கட்டளை:- 1
பண்:- காந்தாரம் இராகம்:- நவரோஜ்
தாளம்:- ரூபகம்

சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்திங்கள்
சூளாமணியும்
வண்ணஉரிவைஉடையும் வளரும் பவள
நிறமும்
அண்ணல் அரண்முரணேறும் அகலம் வளாய
அரவும்
திண்ணன் கெடிலப்புனலும் உடையார் ஒருவர்
தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்சவ
ருவதுமில்லை.

## நமச்சிவாயத் திருப்பதிகம்

பண்:- காந்தாரபஞ்சமம் இராகம்- கேதாரகௌளை
தாளம்:- ஆதி

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே.

பண்:- சாதாரி இராகம்:- பந்துவராளி
தாளம்:- ரூபகம்

தலையே நீவணங்காய்- தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம்:- திருவாரூர் கட்டளை:-1
பண்:- குறிஞ்சி இராகம்:- அரிகாம்போதி
தாளம்:- திஸ்ரதிரிபுடை

முத்துவிதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிகள்
அத்தன்ஆ ரூர்ஆதிரை நாளால் அதுவண்ணம்

தலம்:- திருக்கழிப்பாலை கட்டளை:1
பண்:- காந்தாரம் இராகம்:- நவரோஜ்
தாளம்:- கண்டசாபு

பண்ணார்ந்த வீணை பயின்ற விரவலனே
என்கின்றாளால்
எண்ணார் புரமெரித்த எந்தை பெருமானே
என்கின்றாளால்
பண்ணார் முழவதிரப் பாடலோ டாடலனே
என்கின்றாளால்
கண்ணார் பூஞ்சோலைக் கழிப்பாலை மேயானைக்
கண்டாள் கொல்லோ.

தலம்:- கோயில் பண்:- திருநேரிசை
இராகம்:- நவரோஜ் தாயம்:- ஆதி

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
எத்தினால் பத்திசெய்கேன் என்னை நீ இகழவேண்டாம்
முத்தனே முதல்வாதில்லை அம்பலத் தாடுகின்ற
அத்தாஉன் ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிருத்தம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மாநிலத்தே

கருவாய்க் கிடந்துன் கழலே நினையும்
கத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன்
உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமஎன்று
நீறணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிப் புலயூர்
அரனே.

கோவாய் முடுகி அடுதிறல் கூற்றங் குமைப்பதன் முன்
பூவாரடிச் சுவடென்மேற் பொறித்துவை போகாவிடின்
மூவா முழுப்பழி மூடுங்கண்டாய் முழங்கும் தழல்கைத்
தேவா திருச்சத்தி முற்றத்துறையும் சிவக்கொழுந்தே

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்
போற்றி செய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண்டேல்
இருங்கூற்றகல
மின்னாரு மூவிலைச்சூலம் என்மேற் பொறிமேவு
கொண்ட
துன்னார் கடந்தையுட் தூங்கானை மாடச் சுடர்க்
கொழுந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்:- பழந்தக்கராகம் இராகம்:- சுத்தசாவேரி
தாளம்:- திஸ்ரதிரிபுடை

மனைக்காஞ்சி இளங்குருகே மறந்தாயோ
மதமுகத்த
பனைக்கைமா உரிப்போர்த்தான் பலர்பாடும்
பழனத்தான்
நினைக்கின்ற நினைப்பெல்லாம் உரையாயோ
நிகழ்வண்டே
சுனைக்குவளை மலர்க்கண்ணாள் சொல்தூதாய்ச்
சோர்வாளோ

## ஐந்தாம் திருமுறை

### திருநாவுக்கரசு நாயனார்

### திருக்குறுந்தொகை

தலம்:- திருமறைக்காடு பண்:- திருக்குநற்தொகை
இராகம்:- மாயாமாளவகௌளை தாளம்:- ஆதி

பண்ணின் நேர்மொழி யாழுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே

இராகம்:- பூர்வகல்யாணி

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை யிணையடி நீழலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் திருமுறை
## திருநாவுக்கரசு நாயனார்
### திருத்தாண்டகம்

தலம்:- திருக்காளத்தி இராகம்:- அரிகாம்போதி

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின் மேலான்
ஏழண்டந் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கைலாயத் துச்சி உள்ளான்
காளத்தியான் அவன்என் கண்ணுளானே.

### திருத்தாண்டகம்

தலம்:- திருநல்லூர் இராகம்:- அரிகாம்போதி

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுஉரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத்துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்
நல்லூர்எம் பெருமானார் நல்லவாறே

தலம்:- திருவையாறு இராகம்:- அரிகாம்போதி

ஓசை ஒலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாம் ஆனாய் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ

தலம்:- திரும்பூம்புகலூர் இராகம்:- அரிகாம்போதி

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால்
கண்ணிலேன் மற்றோர்களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணினல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல்வைத்தாய்
ஒக்க அடைக்கும் போது உணரமாட்டேன்
புண்ணிய உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

## ஏழாந் திருமுறை
### சுந்தரமூர்த்தி நாயனார்

தலம்:- திருவெண்ணெய் நல்லூர் பண்:- இந்தளம்
இராகம்:- மாயாமாளவகௌளை தாளம்:- ரூபகம்

பித்தாபிறை சூடிபெருமானே அரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
- அருட்றையும்
அத்தா வுனக்காளாய்இனி அல்லேன் எனலாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம்:- திருக்கேதீச்சரம் பண்:- நட்டபாடை
இராகம்:- கம்பீரநாட்டை தாளம்:- ரூபகம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்தனை கவிழ்வாய்
மத்தம்மத யானைபுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார்எலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

### நமச்சிவாயத் திருப்பதிகம்

தலம்:- திருப்பாண்டிக்கொடுமுடி பண்:- பழம்பஞ்சரம்
இராகம்:- சங்கராபரணம் தாளம்:- ரூபகம்

மற்றுப் பற்றெனக் கின்றிநின்திருப் பாதமேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந்தேன் இனிப்பிறவாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாஉனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

### திருத்தொண்டத் தொகை

பொது பண்: கொல்லிக்கௌவாணம்
இராகம்:- நவரோஜ் தாளம்:- கண்டசாபு

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றவன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம்:- திருக்கோளிலி பண்:- நட்டராகம்
இராகம்:- பந்துவராளி தாளம்:- கண்டசாபு

நீள நினைந்தடியேன் உமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
ஆளிலை யெம்பெருமான் அவைஅட்டித் தரப்பணியே

தலம்:- திருக்கலயநல்லூர் பண்:-தக்கராகம்
இராகம்:- காம்போதி தாளம்:- கண்டசாபு

செருமேவு சலந்தரனைப் பிளந்தசுடர்
செங்கண்மலர்ப் பங்கயமாச் சிறந்தானுக் கருளி
இருள்மேவும் அந்தகன்மேல் திரிசூலம் பாய்ச்சி
இந்திரனைத் தோள்முரித்த இறையவன்ஊர் வினவில்
பெருமேதை மறையொலியும் பேரிமுழவு ஒலியும்
பிள்ளையினந் துள்ளிவிளை யாட்யொலியும் பெருகக்
கருமேதி புனல்மண்டக் கயல்மண்டக் கமலங்
களிவண்டின் கணம் இரியும் கலயநல்லூர் காணே.

தலம்:- திருப்புன்கூர் பண்:- தக்கேசி
இராகம்:- காம்போதி தாளம்:- திரிபுடை

அந்தணாளனுள் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயேனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்அடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம்:- திருமுருகன்பூண்டி　　பண்:- பழம்பழஞ்சுரம்
இராகம்:- சங்கராபரணம்　　தாளம்:- மிஸ்ரசாபு

கொடுகுவெஞ்சிலை வடுகவேடுவர் விரவலாமை
சொல்லித்
திடுகுமொட்டெனக் குத்திக்கூறை கொண்டா
றலைக்குமிடம்
முடுகுநாறிய வடுகர்வாழ் முருகன்
பூண்டிமாநகர்வாய்
இடுகுநுண்ணிடை மங்கைதன்னொடும்
ஏத்துக்கிங்கிருந்தீர் எம்பிரானிரே.

தலம்:- திருக்கச்சியேகம்பம்　　பண்:- தக்கேசி
இராகம்:- காம்போதி　　தாளம்:- ஆதி

ஆலந்தான் உகந்தமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தையுளானை
ஏல வார்குழலாள் உமைநங்கை என்றுமேத்தி
வழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்பனெம்மானைக் காணக்கண்
அடியேன் பெற்றவாறே.

தலம்:- திருவையாறு　　பண்:- காந்தாரபஞ்சமம்
இராகம்:- கேதாரகௌளை　　தாளம்:- ஆதி

பரவும் பரிசொன்று அறியேன்நான் பண்டேஉம்மைப் பயிலாதே
இரவும் பகலும் நினைந்தாலும் எய்தநினைய மாட்டேன்நா
கரவில் அருவி கமுகுண்ணத் தெங்கங்குலைக்கீழ்க் கருப்பா
அரவந்திரைக் காவிரிக்கோட்டத்து ஐயாறுடைய அடிகளோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம்:- திருக்கழுக்குன்றம் பண்:- நட்டபாடை
இராகம்:- கம்பீரநாட்டை தாளம்:- ஆதி

கொன்று செய்த கொடுமையாற்பல சொல்லவே
நின்ற பாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர்பிரானிடம்
கன்றினோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே.

தலம்:- திருக்கொகுடிக்கோயில் பண்:- நட்டராகம்
இராகம்:- பந்துவராளி தாளம்:- கண்டசாபு

சிம்மாந்து சிம்புளிந்துச் சிந்தையினில் வைத்துகந்து திறம்பாவண்ணம்
கைம்மாவின் உரிவைபோர்த்து உமைவெருவக் கண்டானை கருப்பறிய லூர்க்
கொய்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட மயிலாடும் கொகுடிக் கோயில்
எம்மானை மனத்தினால் நினைத்தபோ தவர்நமக்கு இனியவாறே.

தலம்:- திருவாலங்காடு பண்:- பழம்பஞ்சுரம்
இராகம்:- சங்கராபரணம் தாளம்:- ஆதி

முத்தா முத்திதரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்க
சித்தா சித்தித்திறங்காட்டும் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர்பலர் போற்றும் பரமா பழையனூர்மேய
அத்தா ஆலங்காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே.

தலம்:- திருவாரூர் பண்:- காந்தாரம்
இராகம்:- நவரோஜ் தாளம்:- ஆதி

கரையும் கடலும் மலையும் காலையுமாலையு மெல்லாம்
உரையில் விரவிவருவான் ஒலுவன் உருத்திர லோகன்
வரையின் மடமகள்கேள்வன் வானவர் தானவர்க்கெல்லாம்
அரையன் இருப்பதும் ஆரூர்அவர் நம்மையுமாள்வரோ கேளீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம்:- திருவாரூர் பண்:- செந்துருத்தி
இராகம்:- மத்தியமாவதி தாளம்:- ரூபகம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாயிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீா் திருவாரூரிா் வாழ்ந்து போதீரே

தலம்:- திருநொடித்தான்மாலை பண்:- பஞ்சமம்
இராகம்:- ஆகிரி தாயம்:- ரூபகம்

தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென் பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர்கொள்ள மத்தயானை அருள் புரிந்து
ஊனுயிர் வேறு செய்தான் நொடித்தான்மலை உத்தமனே.

## எட்டாந் திருமுறை

### மாணிக்கவாசக சுவாமிகள்

திருவாசகம்

இராகம்:- மோகனம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துஉன்
விரையார்கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீரததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்து உன்னைப் போற்றிசயசய
போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக்
கண்டு கொள்ளே.

ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு
அன்பிலை என்புஉருகிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின் றதும்இலை
துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு அலறிலை
செய்வதொன் றறியேனே

இன்னெறைக் கருளி இருள்கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின்தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து
ஒன்றாந் திருப்பெருந் துறைஉறை சிவனே
ஒன்று நீயல்லை அன்றி ஒன்றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்டலத்து ஈசன்
கண்சுமந்து நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோலால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை
பேயேன துள்ளப்பிழை பொறுக்கும் பெருமையனை
சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள் தில்லையில் அருளிய
## போற்றித் திருவகவல்

நான்முகன் முதலா வானவர் தொழுது எழ
ஈர் அடியாலே மூஉலகு அளந்து
நால்திசை முனிவரும் ஐம்புலன் மரலப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடுமால் அன்று
அடிமுடி அறியும் ஆதரவு அதனில்
கடும்முரண் ஏனம் ஆகி முன் கலந்து
ஏழ்தலம் உருவ இடந்து பின் எய்த்தும்
ஊழிமுதல்வ சய சய என்று
வழுத்தியும் எளிது ஆய் வார்கடல் உலகினில்
யானை முதலா எறும்பு ஈறுஅய்
ஊனம் இல் யோனியின் மாதா உதரத்து
ஈனம் இல் கிருமிச் செருவினில் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையில் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈர்இரு திங்களில் பேர்இருள் பிழைத்தும்
அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களில் ஊறுஅலர் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரம் துயர் இடைப் பிழைத்தும்
ஆண்டுகள் தோறும் அடைந்த அக்காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகல் பசி நிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
கருங்குழல் செவ்வாய் வெள் நகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல் நெருங்கி உள்மதர்த்துக்
கச்சு அற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்து
எய்த்து இடைவருந்த எழுந்து புடைபரந்து
ஈர்க்கு இடைபோகா இளமுலை மாதர்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்த்த நயனம் கொள்ளையில் பிழைத்தும்
பித்தம் உலகர் பெரும் துறைப் பரப்பினுள்
மத்தம் களிறு எனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி என்னும் அல்லலில் பிழைத்தும்
கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்
செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்
நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்து
புல்வரம்பு ஆய பலதுறை பிழைத்தும்
தெய்வம் என்பது ஓர் சித்தம் உண்டாகி
முனிபு இலாதது ஓர் பொருள் அது கருதலும்
ஆறு கோடி மாயா சக்திகள்
வேறு வேறு தம்மாயைகள் தொடங்கின
ஆத்தம் ஆனால் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினர்
சுற்றம் என்னும் தொல்பசுக் குழாங்கள்
பற்றி அழைத்துப் பதறினர் பெருகவும்
விரதமே பரம் ஆக வேதியரும்
சரதம் ஆகவே சாத்திரம் காட்டினர்
சமய வாதிகள் தம் தம் மதங்களே
அமைவது ஆக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாதம் என்னும்
சண்ட மாருதம் சுழித்து அடித்து ஆஅர்த்து
உலோகாயதன் எனும் ஒள் திறல் பாம்பின்
கலா பேதத்த கடுவிடம் எய்தி
அதில்பெரு மாயை எனைப்பல சூழவும்
தப்பாமே தாம்பிடித்து சாலியத்
தழலது கண்ட மெழுகு அது போல
தொழுது உளம் உருகி அழுது உடல் கம்பித்து
ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையும் கொண்டது விடாது எனும்
படியே ஆகி நல்இடை அறா அன்பின்
பசுமரத்து ஆணி அறைந்தால் போலக்
கசிவது பெருகிக் கடல் என மறுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகம் குழைந்து அனுகுலம் ஆய் மெய்விதிர்த்துச்
சகம் பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாண் அது ஒழிந்து நாடவர் பழித்துரை
பூண் அது ஆகக் கோணுதல்இன்றிச்
சதுர் இழந்து அறிமால் கொண்டு சாரும்
கதியது பரமா அதிசயம் ஆகக்
கற்றா மனம் எனக் கதறியும் பதறியும்
மற்று ஓர் தெய்வம் கனவிலும் நினையாது
அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையைச்
சிறுமை என்று இகழாதே திருவடி இணையைப்
பிறிவினை அறியா நிழல் அது போல
முன்பின் ஆகி முனியாது அத்திசை
என்பு நைந்து உருகி நெக்கு நெக்கு ஏங்கி
அன்பு எனும் ஆறுகரை அது புரள
நன்புலன் ஒன்றி நாத என்று அரற்றி
உரை தடுமாறி உரோமம் சிலிர்ப்பக்
கரம் மலர் மொட்டித்து இருதயம் மலரக்
கண் களிகூர நுண்துளி அரும்ப
சாயா அன்பினை நாள்தொறும் தழைப்பவர்
தாயே ஆகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதியன் ஆகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடுஅகம் மதுரை அரசே போற்றி
கூடல் இலங்கு குருமணி போற்றி
தென் தில்லை மன்றினுள் அடி போற்றி
இன்று எனக்கு ஆரமுது ஆனாய் போற்றி
மூபா நான்மறை முதல்வா போற்றி
சே ஆர் வெல் கொடிச் சிவனே போற்றி
மின் ஆர் உருவ விகிர்தா போற்றி
கல்நார் உரித்த கனியே போற்றி
காவாய் கனகம் குன்றே போற்றி
ஆ ஆ என் தனக்கு அருளாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரைசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரணம் விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செம்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையேன் அடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க்கு அரிய மருந்தே போற்றி
ஏனோர்க்கு எளிய இறைவா போற்றி
மூஏழ் சுற்றம் முரண்உறு நரகுஇடை
ஆழாமே அருள் அரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றி என் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரை உணர்வு இறந்த ஒருவ போற்றி
விரிகடல் உலகின் விளைவே போற்றி
அருமையில் எளிய அழகே போற்றி
கருமுகில் ஆகிய கண்ணே போற்றி
மன்னிய திரு அருள் மலையே போற்றி
என்னையும் ஒருவன் ஆக்கி இரும்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி
அழிவு இலா ஆனந்த வாரி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மான் நேர் நோக்கி மணாளா போற்றி
வான் அகத்து அமரர் தாயே போற்றி
பார் இடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீர் இடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
தீஇடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
வளிஇடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவர் ஒன்றாய் உள்ளத்து அமுதே போற்றி
கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி
நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி
இடைமருது உறையும் எந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீர் ஆர் திருவை யாறா போற்றி
அண்ணாமலை எம் அண்ணா போற்றி
கண் ஆர் அமுதம் கடலே போற்றி
ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி
பாகம் பெண் உரு எந்தாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப் பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்று ஓர் பற்று இங்கு அறியேன் போற்றி
குற்றாலத்து எம் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய்மலை எம் எந்தாய் போற்றி
பாங்கு ஆர் பழனத்து அழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க்கு அருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழ் இரு மூவர்க்கு
அத்திக்கு அருளிய அரசே போற்றி
தென்நாடு உடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனம் குருளைக்கு அருளினை போற்றி
மானம் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெடே அருளும் இறைவா போற்றி
தளர்ந்தேன் அடியென் தமியேன் போற்றி
களம் கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சேல் என்று இங்கு அருளாய் போற்றி
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோலம் நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சு ஏர் அடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி
இலங்கு சுடர் எம் ஈசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலை நாடு உடை மன்னே போற்றி
கலை ஆர் அரிகேசரியாய் போற்றி
திருக்கழுக் குன்றில் செல்வா போற்றி
பொருப்பு அமர் பூவணைத்து அரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி
தெரிவு அரிது ஆகிய தெளிவே போற்றி
தோளா முத்தம் சுடரே போற்றி
ஆள் ஆனவர்கட்கு அன்பா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரா அமுதே அருளே போற்றி
பேர் ஆயிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி அறுகின் தாராய் போற்றி
நீள் ஒளி ஆகிய நிருத்தா போற்றி
சந்தனம் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக்கு சாந்தின் சுந்தர போற்றி
மந்திரம் மாமலை மேயாய் போற்றி
எம்தமை உய்யக் கொள்வாய் அருளினை போற்றி
புலிமுலை புல்வாய்க்கு அருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கரும் குருவிக்கு அன்று அருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி
படிஹறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடு ஈறு ஆனாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நால் நிலம் புகாமல்
பரகதி பாண்டியற்கு அருளினை போற்றி
ஒழிவு அற நிறைந்த ஒருவ போற்றி
செழும் மலர்ச் சிவபுரத்து அரசே போற்றி
கழு நீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பு ஒன்று அறியா நாயேன்
குழைத்த சொல் மாலை கொண்டருள் போற்றி
புரம் பல எரித்த புராண போற்றி
பரம் பரம் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாம் திருமுறை
## திருவிசைப்பா
### திருமாளிகைத்தேவர் பாடியது

இராகம்:- ஆனந்தபைரவி

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியே
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மாலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரஎண் கண் குளிர்ந்தனவே.

### கருவூர்த் தேவர் பாடியது

புவனநாயகனே அகவுயிர்க் கமுதே
பூரணா ஆரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ பன்னகா பரணா
அவனி ஞாயிறுபோன்று அருள்புரிந்து அடியேன்
அகத்திலும் முகத்திலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலும் அமர்ந்தாய்
தனியனேன் தனிமை நீங்குதற்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளமால் வரையைப் பனிபடர்ந்த தனையதேர்
படரொளி தருதிரு நீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்று ரெற்குழல் திருச்சடையும்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுட்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல் மெழுகு ஒக்கின்றதே.

பின்னு செஞ்சடையும் பிறைதவழ் மொழும்பும்
பெரியதங் கருணையும் காட்டி
அன்னை தேன்கலந்து இன்னமுது உகந்து
அளித்தங்கு அருள்புரி தரமர்தங் கோயில்
புன்னை தேன்சொரியும் பொழிகலங் குடைந்து
பொறிவரி வண்டினம் பாடும்
தென்ன தேன் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிறம் பலமே.

### திருப்பல்லாண்டு சேந்தனார்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்கே
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க தெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர்
சிறுநெறி சேராமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லாண்ட கனகனத்திரள் மேருவிடங்கன்
விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருக
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மிமிகு திருவா ரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடியா ரொடுங்கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

ஆரார் வந்தார் அமரர் குழதாத்தில்
அணியுடை யாதிரை நாள்
நாராய ணனொடு நான்முக னங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியிற் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தாம் திருமுறை

### திருமந்திரம் – திருமூலர்

சிவனோ டொக்கும் தெய்வம் தேடினுமில்லை
அவனோ டொப்பா ரிங்கு யாவருமில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவளச் சடைமுடித் தாமரை யானே.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரு மறிகிலார்
அன்பே சிவமாவது யாரு மறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

சைவ சமயத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறிச் சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத் துளார்க்கு வகுத்து வைத்தானே.

## பதினோராந் திருமுறை

### கபிலதேவர்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நக்கீரர்

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே- ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்

### சேரமான் பெருமானாயனார்

சிந்தனைசெய்ய மனம்அமைத்தேன் செப்பநா அமைத்தேன்
வந்தனை செய்யத் தலை அமைத்தேன் கைதொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத்தேன் மெய்அரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறணி ஈசற்கு இவையான் விதித்தனவே

### பட்டினத்தடிகள்

வாழ்வாகவும் தங்கள் வைப்பாகவும் மறையோர் வணங்க
ஆள்வாய் திருத்தில்லை யம்பலத்தா உன்னையன்றி ஒன்றைத்
தாழ்வா ரறியாச் சடிலஞ்சை உண்டிலையாகில்
மாள்வார் சிலரையன்றோ தெய்வாக வணங்குவமே.

### நம்பியாண்டார் நம்பி

என்றும் அடியவர் உள்ளத் திருப்பன இல்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்து
உன்றும் புலவர்கள் யாப்புக் குரியன ஒண்கலியைப்
பொன்றும் கவுணியன் சைவசி காமணி பொன்னடியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரண்டாந் திருமுறை

### பெரியபுராணம் – சேக்கிழார் சுவாமிகள்

இராகம்:- மத்தியமாவதி

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிக மேயாக
இந்துவாழ் சடையானாடும் ஆனந்த எல்லையில்
தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைத்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்து எழும் பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றேன் என்று அவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்

இறவாத இன்ப அன்புவேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமைவேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும் போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்.

ஆலமே அமுதமாக உண்டு வானவர்க் களித்துக்
காலனை மார்க்கண்டர்க்காகக் காய்ந்தனை அடியேற்கின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலம் நின்புகழேயாக வேண்டும்நான் மறைகள் ஏத்தும்
சீலமே ஆலவாயிற் சிவபெருமானே என்றார்

மண்ணிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல் விழாப்பொலிவு கண்டார்தல்
உண்மையாம் எனில் உலகர்முன் வருகென உரைத்தார்

என்று மின்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

**திருப்புகழ் - அருணகிரிநாதர்**

இராகம்:- நாட்டை தாளம்- ஆதி

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியி னுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்கமன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில் முற்பட எழுதிய
முதல்வோனே
முப்பரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்:- சாமா தாளம்:- கண்டசாபு

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் உனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

இராகம்:- சண்முகப்பிரியா தாளம்:- மிஸ்ரசாபு

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபரன் எனவோது
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்துமூ வர்க்கத் தமரரும் அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடும்
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பசித்தொடு ரசித் தருள்வதும் ஒருநாளே
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்க நடிக்கக் கழுகொடு கழுகாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் ரிகடக எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குந்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணவுரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே

இராகம்:- தேஷ் தாளம்:- ஆதி

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமதான சற்குணர் நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

இராகம்:- சக்ரவாகம் தாளம்:- கண்டசாபு

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநான் நினைந்தருள் பெறுவேனோ
இபமா முகன்தனக் கிளையோனே
இமவான் மடந்தை உத்தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவா வினன்குடிப் பெருமாளே

இராகம்:- சுபபந்துவராளி தாளம்:- கண்டசாபு

எதிரிலாத பத்தி தனைமேவி
இனியதாள் நினைப்பை இருபோதும்
இதய வாரிதிக்குள் உறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே
கதிரகாம வெற்பில் உறைவோனே
கனக மேருவொத்த புயவீரா
மதுர வாணியுற்ற கழலோனே
வழுதிகூன் நிமிர்த்த பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியினை மனதார நவில்கின்றோம்

எமது குடும்பத்தலைவர் இறையடியுற்ற வேளையில் எமைநாடி வந்து துயர் பகிர்ந்தவர்கள், இறுதிக் கிரியைகளிலும் தகனக்கிரியைகளிலும் கலந்து கொண்டவர்கள், தொலை பேசியில் அனுதாபம் தெரிவித்தவர்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்ட அன்புள்ளங்கள் மற்றும் எமக்கு பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது உள்ளம் நெகிழ்ந்த நன்றியினைப் பகிர்கின்றோம்.

இன்றைய இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டவர்களுக்கும். இம்மலர் மலரை அழகுற அச்சிட்டுத்தந்த அச்சகத்தாருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளை இருகரம் கூப்பி நவில்கின்றோம்.

*"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது*
*அன்றே மறப்பது நன்று"*

நன்றி.

*குடும்பத்தினர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.

**"இதுவே உலக நியதியும்,**
**எனது படைப்பின் சாராம்சமாகும்"**

**பகவான் - ஸ்ரீ கிருஷ்ணர்**

கஜானந் - இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org